உங்கள் மத்தியிலே வைக்கிறேன். அருள் கூர்ந்து இவ் வாண்டு இல்லை என்றாலும் வரும் ஆண்டிலாவது செய் வதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை கனிவோடு பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 212, திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

212—

ஊனமுற்றோருக்குத் தனி மருத்துவமனை.

*3405 திருமதி கவிநிலவு தர்மராஜ்:

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமது அன்றாடப் பணிகளைக் கூட செய்ய இயலாத ஊனமுற்றோருக்குத் தனி மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) மொடக்குறிச்சி தொகுதியில் இருக்கும் 41 ஊன முற்றோருக்கு வாழ்வளிக்க ஊனமுற்றோர் பள்ளியில் சேர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது இல்லை. மற்ற உதவிகள் வழங்கப்படு கின்றன.

(ஆ) இந்த 41 பேர் பற்றி விவரம் தந்தால் ஆவன செய் யப்படும்.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தமிழக அரசினுடைய கடந்த கால ஆட்சியி னுடைய ஊன நிலையை மாற்றி ஒரு உன்னத நிலைக்குத் தமி ழக அரசையே உருவாக்கி அமைத்திருக்கும் கலி உலக சிற்பி, நான் வணங்கும் நடமாடும் பேசும் தெய்வம் இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பெற்ற குழந்தை களுடைய உடல் ஊனத்தைப் பார்த்து உள்ளம் ஊனம்பட்ட

சூழ்நிலையில் இருக்கக்கூடிய பெற்றோர்கள் மகிழக்கூடிய விதத்திலே அத்தனை பேர்களுக்கும் தாயாக இருந்து பணியாற்றக்கூடிய தாயுள்ளம் கொண்ட, கருணை தேவதையினுடைய ஆட்சியிலே ஊனமுற்றோருக்கு என்று வருகின்ற நிதி ஆண்டிலேயாவது ஒரு தனி மருத்துவ மனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையைப் பொறுத்த மட்டில் இவ்வகை ஊனமுற்றோர்கள் குடும்பத்திற்கு ஒரு பாரமாக அமையக்கூடாது என்பதற்காக அரசு அவர்களுக்கு மாதம் 100 ரூபாய் உதவித் தொகை வழங்கி வருகிறது. இந்த ஆண்டு 15 ஆம் தேதி உலக ஊனமுற்றோர் நாளாகும். இதுவரை தமிழகத்தில் ஆண்ட எல்லா முதலமைச்சர்களுடைய ஆட்சியிலும் 400 ஊனமுற்றவர்களுக்கு மட்டுமே அரசு உதவித் தொகை வழங்கி வந்தது. ஆனால் இன்று இருக்கின்ற நிதிநிலை நெருக்கடியிலேயும் முதன் முதலாக இந்த ஆண்டு 630 பேர்களுக்கு வழங்கவேண்டும் என்று உத்தரவு போட்டு இருப்பவர் தமிழகத்தின் முதல் முதலமைச்சர் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆவார்கள். மருத்துவ மனைக்குச் சென்று வர 20 வயதிற்கு உட்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. ஒரு பெரிய அரசு மருத்துவ மனையிலே ஊனமுற்றவர்களுக்கு என்று சிகிச்சைபெற தனிப் பிரிவுகள் கண், காது, முடநீக்கியல் பிரிவுகள் உள்ளன. சென்னை கே. கே. நகரில் கை, கால் ஊனமுற்றவர்களுக்கு என்ற தனி சிகிச்சை நிலையும் இயங்கி வருகிறது. ஆண்டுதோறும் 50 வட்டாரங்களில் உடல் ஊனமுற்றவர்களுக்கென எல்லா வசதிகளும் செய்து தரப்படுகின்றன. இந்த நிலையில் ஊனமுற்றவர்களுக்கென தனியாக மருத்துவமனை அமைப்பது பற்றி சுகாதாரத் துறைதான் முடிவு செய்ய வேண்டும்.

முற்பகல் 10-15

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே சுகாதாரத் துறையாவது இந்தக் குறையை நிவர்த்தி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்புடையது அல்ல. சமூக நலத் துறையைப் பார்த்து, சுகாதாரத் துறையாவது இந்தக் குறையை நிவர்த்தி செய்யுமா என்று கேட்பது பொருத்தம் இல்லாதது, உட்காருங்கள். டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்தத் துறைகளில் எவ்வளவு சலுகைகள், குறிப்

பாக மருத்துவ வசதி, கல்வி வசதி உள்ளன என்பது உடல் ஊனமுற்றவர்களுக்கு சரிவர விளக்கப்படுவதில்லை என்று உடல் ஊனமுற்றவர்கள் சொல்கிறார்கள். அது உண்மையா? உண்மையெனில் இதை நிவர்த்தி செய்ய அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்புத் திட்டத்திலும், கல்வித் திட்டத்திலும் உடல் ஊனமுற்றவர்கள் அதற்கு விண்ணப்பம் அளித்திருந்தால் முதல் அடிப்படையில் அவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை உறுப்பினருக்குத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்:

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் பல ஆண்டுக் கணக்கில் கை வண்டிக்காக காத்திருக்கிறார்கள். அவ்வாறு தங்களுடைய வேலை வாய்ப்புக்காக வண்டிக்காக, காத்திருக்கிறவர்கள் மற்றும் காலிபர்ஸ் (Calipers) போன்றவற்றுக்காக காத்துக் கொண்டிருப்பவர்கள் நலன் கருதி அரசு உடனுக்குடன் அந்த நபர்களுக்கு கை சக்கரங்கள் வழங்கவும், காலிபர்ஸ் வழங்கவும் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கடந்த ஆண்டுகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார் என்று கருதுகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற உடன், கடந்த ஆண்டு விண்ணப்பங்கள் கூட பரிசீலனை செய்யப்பட்டு, உடனுக்குடன் வழங்கப்படுகின்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 213, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்

213—

அரசுத் துறைகளில் 30 சதவிகிதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு

*3877 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசின் எல்லாத் துறைகளிலும் 30 சதவிகிதம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?